**செ.வெ.எண்:63** **நாள்:28.09.2019**

## அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் திரு.எ.சரவணவேல்ராஜ், இஆப., அவர்கள் ஆய்வு.

அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் **திரு.எ.சரவணவேல்ராஜ்,இஆப.,** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்களுடன் இன்று (28.09.2019) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அரியலூர் நகராட்சி மற்றும் ஜெயங்கொண்டம் நகராட்சி, செந்துறை வட்டத்திற்குட்பட்ட குடியிருப்பு பகுதிகளில் சுகாதாரப்பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களை கொண்டு தூய்மை பணி மற்றும் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள், நிலவேம்பு கசாயம் வழங்கும் பணிகளை பார்வையிட்டார்கள்.

பின்னர், அரியலூர் ஒன்றியத்திற்குட்பட்ட காவனூர் கிராமத்தில் வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.9 இலட்சம் மதிப்பில் குடிமராமத்துத் திட்டத்தின்கீழ் இச்சிலேடிஏரி தூர் வாரும் பணி மற்றும் கரைகள் பலப்படுத்தும் பணியினையும், தத்தனூர் கிராமத்தில் ரூ.3.36 இலட்சம் மதிப்பில் பொன்னப்பன் ஏரி தூர் வாரும் பணி மற்றும் கரைகள் பலப்படுத்தும் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், குருவாலப்பர் கோவில் கிராமத்தில் பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரம்) சார்பில் ரூ.20 இலட்சம் மதிப்பில் பொன்னேரியில் குடிமராமத்து திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் பணிகளை பார்வையிட்டார்கள். தொடர்ந்து, செந்துறை ஊராட்சி ஒன்றியம், பொன்பரப்பி கிராமத்தில் பிரதம மந்திரி கனிம துறை நல திட்டத்தின்கீழ் ரூ.30 இலட்சம் மதிப்பில் புதியதாக கட்டப்பட்டு வரும் சுகாதாரத்துணை நிலையம் மற்றும் குடியிருப்பு பணிகளையும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இஆப.,** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களை அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வின்போது, திட்ட இயக்குநர் (ஊரகவளர்ச்சித்துறை) சுந்தர்ராஜன், உதவிசெயற்பொறியாளர் சாந்தி, அரியலூர் நகராட்சி ஆணையர் திருநாவுகரசு மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**